**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 328 of 2025

Depositions of PW -3 witness for ________ Prosecution / Defence / Court

Name : பிரதீப்குமார்

Father's Name : கிருஷ்ணன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th **day of February** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் இடுவாய் பாரதிபுரத்தில் குடியிருந்து கொண்டு டைலராக வேலை பார்த்து வருகிறேன். சம்பவத்தில் இறந்த அய்யம்மாள் எனது அக்கா. தேதி, மாதம் மற்றும் ஆண்டு ஞாபகம் இல்லை. சுமார் மூன்று வருடங்களுக்கு முன்பாக காலை சுமார் 09.45 மணியளவில் பத்திரிகை கொடுப்பதற்காக எனது அக்காவும் அக்கா மகனும் இருசக்கர வாகனத்தில் எங்களுக்கு முன்பாக சென்று கொண்டு இருந்தார்கள். நானும் எனது மாமா சந்திரசேகரும் பின்னால் சென்று கொண்டிருந்தோம். எங்களை முந்திக்கொண்டு லாரி ஒன்று சென்று எங்களுக்கு முன்னால் சென்று கொண்டிருந்த முகேஷின் வாகனத்தின் வலதுபுற கண்ணாடியில் லாரி மோதியவுடன் முகேஷ் வாகனத்திற்கு முன்பாக விழுந்துவிட்டார்.

2. எனது அக்கா சாலையின் வலது புறமாக விழுந்ததில் லாரியின் பின் சக்கரம் எனது அக்காவின் தலையில் ஏறி இறங்கியது. சம்பவ இடத்திலேயே எனது அக்கா இறந்துவிட்டார். முகேஷிற்கு சிறிய அளவில் சிறாய்ப்பு காயங்கள் மட்டும் ஏற்பட்டது. முதலுதவி சிகிச்சை அளித்து

சூலூர் காவல் நிலையம் வந்து புகார் அளித்தோம். லாரியின் பதிவு எண் ஞாபகம் இல்லை. லாரியின் ஓட்டுனரை நான் அப்பொழுது பார்க்கவில்லை. புகாரை நான் எழுதினேன். முகேஷ் படித்து பார்த்து கையொப்பம் செய்தார். பின்னர் எனது அக்காவின் உடல் மீது பிரேத விசாரணை மேற்கொண்டபோது உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. போலீசார் என்னை விசாரித்த பொழுது சொன்ன விபரத்தை தான் நான் தற்பொழுது நீதிமன்ற முதல் விசாரணையிலும் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். திருப்பூரில் இருந்து நாங்கள் எத்தனை மணிக்கு கிளம்பினோம் என்றால் சுமார் 08.00 முதல் 8:30 மணிக்குள்ளாக கிளம்பினோம். முகேஷ் எங்களுக்கு கால் மணி நேரம் முன்பாக கிளம்பினார். முகேஷ் அப்பாச்சி வாகனத்தை ஓட்டிக்கொண்டு சென்றார் என்றால் சரிதான். எங்களது வாகனத்தினை நான் ஓட்டிச்செல்ல சந்திரசேகர் பின்னால் அமர்ந்திருந்தார். தாங்கள் சம்பவ இடம் வந்த பொழுது சுமார் 09.45 மணி இருக்கும். சம்பவ இடம் அருகே சிக்னல் மற்றும் குறுகிய பாலம் உள்ளது என்றால் சரிதான்.

2. நான் முகேஷ் வாகனத்திற்கு சுமார் 50 அடி பின்பாக வந்து கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல, பார்க்கும் தூரத்தில் வந்து கொண்டிருந்தேன். நாங்கள் லாரியின் பின்னால் இடதுபுறத்திலா அல்லது வலது புறத்திலா அல்லது நடுப்பகுதியில் வந்து கொண்டிருந்தோமா என்றால் லாரியின் நடுப்பகுதியில் வந்து கொண்டிருந்தோம். சத்தம் கேட்டு விபத்து சம்பவத்தை நான் பார்த்தேன் என்றால் சரியல்ல. விபத்து சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேன். நான் தான் புகாரை எழுதினேன். குறுகிய பாலம் அருகே தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் சிக்னல் உள்ளது என்றால் சரிதான். சம்பவத்தில் இறந்தது எனது அக்கா என்பதாலும் முகேஷ் எனது அக்கா மகன் என்பதாலும் அவர்கள் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. விபத்து ஏற்பட்டவுடன் பொதுமக்கள் கூட்டம் கூடி விட்டார்கள் என்றால் சரிதான். சுமார் 30 நபர்கள் கூறினார்கள். சம்பவ சாலையானது வாகனங்கள் அதிக அளவில் செல்லக்கூடிய சாலை என்றால் சரிதான். எங்களுக்கு முன்பாகவும் எங்களுக்கு பின் பாகமும் வாகனங்கள் வந்து கொண்டிருந்தது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.02.06 19:25:22 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**